**<u>கொவிட் 19 எச்சரிக்கை மட்ட – 3 கீழ் விதிக்கப்பட்டுள்ள வரையறைகள் திருத்தப்படுகின்றது: செய்யக்கூடியவை மற்றும் முடியாதவை</u>**

அண்மைக்காலத்தில் நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் 19 தொற்றுப் பரவல் அதிகரிப்பின் காரணமாக சுகாதார அமைச்சு மேலும் சில எச்சரிக்கை மட்ட III இன் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ள விடயங்கள் மேலும் திருத்தப்பட்டுள்ளது. உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் வெளியிடப்பட்டுள்ள இவ்வழிகாட்டல்கள் மீள் அறிவித்தல் வரை நடைமுறையில் இருக்கும்.

கொவிட் 19 தொற்றுப் பரவலுக்கு முகங் கொடுக்கும் வகையில் பொது மக்கள் செயற்பாடுகளை தளர்த்துதல் தொடர்பாக சுகாதார அமைச்சால் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள நடவடிக்கை விபரங்கள் உள்ளிட்ட வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கும்.

கொவிட் 19 தொற்றுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்காக பின்பற்ற வேண்டிய முற்பாதுகாப்பு ஏற்பாடுகள் பல **(DReAM)** சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளதுடன், குறித்த முற்பாதுகாப்பு மேற்குறிப்பிட்ட வழிகாட்டலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**DReAM** என அறிமுகப்படுத்தப்பட்டுள்ள குறித்த முற்பாதுகாப்பு விதிமுறைகள் கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டியதன் அவசியத்தை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறப்படுகின்றது.

D – சமூக இடைவெளி, கூட்டமாக கூடாதிருத்தல், வீட்டிலேயே இருத்தல் (Physical Distancing, No gathering, Mainly stay at Home)

Re – சுவாச பழக்கங்கள் (Respiratory etiquette)

A – தொற்று நீக்கி முறைகள் (கைகளைக் கழுவுதல், தொற்று நீக்கித் திரவம் பயன்படுத்தல்) (Aseptic practices)

M – சரியான வகையில் முகக் கவசம் அணிதல் (Proper use of Mask)

கொவிட் 19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக தற்போது வெளியிடப்பட்டுள்ள எச்சரிக்கை மட்டம் - 03 இற்கு மேலும் சில வரையறைகள் உள்வாங்கப்படுகின்றது.

அனுமதிக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பணிகள் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அசேல குணவர்த்தன
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

இணைப்பு 01

**<u>கொவிட் 19 எச்சரிக்கை மட்டம் - 3 இன் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டவாறு</u>**

| | | |
|---|---|---|
| 01 | பொதுப் போக்குவரத்து | பேருந்து/புகையிரதத்தில் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு மாத்திரமே பயணிகள் போக்குவரத்து செய்தல் |
| 02 | தனியார் வாடகை வாகனங்கள் | மோட்டார் வாகனம் மற்றும் முச்சக்கரவண்டிகளுக்காக அதிகபட்ச பயணிகள் இரண்டு பேர் ஆவர். ஏனைய வாகனங்கள் தொடர்பாக ஆசன எண்ணிக்கைக்கு சமனான பயணிகள் போக்குவரத்து செய்யலாம். |
| 03 | நுகர்வோர் சேவைகள் - மின்சாரம், நீர், தொலைபேசி, எரிபொருள் நிரப்பு நிலையம், எரிவாயு நிரப்பு நிலையம், மோட்டார் வாகனம் திருத்துமிடம், ரயர் சேவைகள், அஞ்சல் / பொதிகள் சேவைகள் | குறைந்தளவு ஊழியர்களைக் கொண்டு அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் விநியோகித்தல்.<br>ஏனைய ஊழியர்கள் வீட்டிலிருந்து வேலை செய்தல். |
| 04 | அரச அலுவலகங்கள் | அரச நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அவர்கள் வெளியிட்ட சுற்றறிக்கைக்கமைய தேவையான குறைந்தளவு பணியாளர் குழாம் |
| 05 | தனியார் துறை அலுவலகங்கள் | தேவையான குறைந்தளவு பணியாளர்களைக் ஈடுபடுத்தல். ஏனைய பணியாளர்கள் இயன்றவரை வீட்டிலிருந்து பணியாற்றல். |
| 06 | மாநாடுகள்/கருத்தரங்குகள்/கூட்டங்கள்/ வணிகச்சின்ன வெளியீட்டு நிகழ்வுகள் | 2021.05.20 ஆம் திகதி வரை அனுமதியில்லை. இக்காலப்பகுதிக்குப் பின்னர் நிலவும் கொவிட் நிலைமையை அடிப்படையாகக் கொண்ட மீள் பரிசீலனை செய்யப்படும். |
| 07 | ஏற்றுமதி கைத்தொழில்கள் (ஆடைத் தொழிற்சாலை, விவசாய உற்பத்திகள் போன்றன) | பிராந்திய சுகாதார உத்தியோகத்தர்களின் கண்காணிப்பின் கீழ் உயிர் பாதுகாப்பு குமிழுக்குள்(bio secure bubble) (அதாவது பணியாளர்களுக்க பாதுகாப்பான தங்குமிட வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை உறுதி செய்தல்) |
| 08 | பல்பொருள் அங்காடிகள் | நிலவும் இடவசதிக்கமைய ஒரே தடவையில் இருக்கக்கூடிய வாடிக்கையாளர்களில் 25% வீதமானவர்களை மாத்திரம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைக்கமைய அனுமதிக்கலாம். ஒரு நபருக்காக 1.5 சதுர மீற்றர் இடவசதி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். உள்வாங்கக் கூடிய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை வெளியில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். |
| 09 | பாரியளவிலான வர்த்தக நிலையங்கள் | நிலவும் இடவசதிக்கமைய ஒரே தடவையில் இருக்கக்கூடிய வாடிக்கையாளர்களில் 25% வீதமானவர்களை மாத்திரம் வழங்கப்பட்டுள்ள |

| | | |
|---|---|---|
| | | ஆலோசனைக்கமைய அனுமதிக்கலாம். ஒரு நபருக்காக 1.5 சதுர மீற்றர் இடவசதி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். உள்வாங்கக் கூடிய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை வெளியில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். பாரிய வர்த்தக நிலைய வளாகத்தில் கூட்டமாக கூடியிருத்தல் மற்றும் வைபவங்களை நடாத்துவதற்கு அனுமதியில்லை. |
| 10 | நிதி நிறுவனங்கள் (வங்கிகள், நிதி நிறுவனங்கள், அடகு பிடிக்கும் நிலையங்கள்) | நிலவும் இடவசதிக்குள் ஒரே தடவையில் நிற்கக் கூடிய மொத்த வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் அதிகபட்சம் 25% வீதமானவர்கள் சுகாதார நடைமுறைகளுக்கமைய பேணமுடியும். உள்வாங்கக் கூடிய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை வெளியில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். |
| 11 | புடவையகங்கள் | நிலவும் இடவசதிக்கமைய ஒரே தடவையில் இருக்கக்கூடிய வாடிக்கையாளர்களில் 25% வீதமானவர்களை மாத்திரம் வழங்கப்பட்டுள்ள சுகாதார ஆலோசனைக்கமைய அனுமதிக்கலாம். ஒரு நபருக்காக 1.5 சதுர மீற்றர் இடவசதி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். உள்வாங்கக் கூடிய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை வெளியில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். |
| 12 | விவசாய நடவடிக்கைகள் | **DReAM** என அறிமுகப்படுத்தப்பட்டுள்ள குறித்த முற்பாதுகாப்பு விதிமுறைகளை சரியாகப் பின்பற்றி வழக்கமான முறையில் செயற்படலாம். |
| 13 | சில்லறை விற்பனை நிலையங்கள் | நிலவும் இடவசதிக்கமைய ஒரே தடவையில் இருக்கக்கூடிய வாடிக்கையாளர்களில் 25% வீதமானவர்களை மாத்திரம் வழங்கப்பட்டுள்ள சுகாதார ஆலோசனைக்கமைய அனுமதிக்கலாம். |
| 14 | திறந்த வியாபார நிலையம்/சந்தை/பொருளாதார மத்திய நிலையங்கள் | நிலவும் இடவசதிக்கமைய ஒரே தடவையில் இருக்கக்கூடிய வாடிக்கையாளர்களில் 25% வீதமானவர்களை மாத்திரம் வழங்கப்பட்டுள்ள சுகாதார ஆலோசனைக்கமைய அனுமதிக்கலாம். |
| 15 | வெதுப்பக விற்பனை நிலையங்கள், சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மற்றும் ஒப்பனை அலங்கார நிலையங்கள், தளபாடங்கள், இலத்திரனியல் உபகரணங்கள், கட்டிடப் பொருட்கள், தையல் மற்றும் ஆடை உற்பத்திகள், தொலைத்தொடர்பு நிலையங்கள், மற்றும் போட்டோ பிரதி நிலையங்கள் | நிலவும் இடவசதிக்கமைய ஒரே தடவையில் இருக்கக்கூடிய வாடிக்கையாளர்களில் 25% வீதமானவர்களை மாத்திரம் வழங்கப்பட்டுள்ள சுகாதார ஆலோசனைக்கமைய அனுமதிக்கலாம். உள்வாங்கக் கூடிய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை காட்சிப்படுத்தப்பட வேண்டும். |
| 16 | நடமாடும் வியாபாரிகள்/ வீதியோர வியாபாரிகள் | **DReAM** என அறிமுகப்படுத்தப்பட்டுள்ள குறித்த முற்பாதுகாப்பு விதிமுறைகளை சரியாகப் பின்பற்றி வழக்கமான முறையில் செயற்படலாம். |
| 17 | எரிபொருள் நிரப்பு நிலையங்கள் | **DReAM** என அறிமுகப்படுத்தப்பட்டுள்ள குறித்த முற்பாதுகாப்பு விதிமுறைகளை சரியாகப் பின்பற்றி வழக்கமான முறையில் செயற்படலாம். |

| | | |
|---|---|---|
| 18 | கட்டுமான தளங்கள் | **DReAM** என அறிமுகப்படுத்தப்பட்டுள்ள குறித்த முற்பாதுகாப்பு விதிமுறைகளை சரியாகப் பின்பற்றி வழக்கமான முறையில் செயற்படலாம். |
| 19 | நீதிமன்றங்கள் | நிலவும் இடவசதிக்கமைய ஒரே தடவையில் இருக்கக்கூடிய மொத்த நபர்களின் எண்ணிக்கையின் 25% வீதமானவர்கள் வழங்கப்பட்டுள்ள சுகாதார ஆலோசனைகளுக்கமைய பேணப்பட வேண்டும் |
| 20 | சிறைச்சாலைகள் | கைதிகளைப் பார்வையிடுவதற்கு அனுமதியில்லை |
| 21 | சுகாதார துறை | சேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான சுகாதார ஊழியர்களை வழங்கப்பட்டுள்ள சுகாதார ஆேரசனைகளுக்கமைய ஈடுபடுத்தி செயலாற்றல் |
| 22 | பகல் பராமரிப்பு நிலையங்கள் | இயங்க முடியாது |
| 23 | முன்பள்ளிகள் | மீள் அறிவித்தல் வரை இயங்காது |
| 24 | பாடசாலைகள் | மீள் அறிவித்தல் வரை இயங்காது |
| 25 | பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர் கல்வி நிலையங்கள் | மீள் அறிவித்தல் வரை இயங்காது |
| 26 | தனியார் வகுப்புக்கள் | மீள் அறிவித்தல் வரை இயங்காது |
| 27 | திருமண வைபவங்கள் | 2021.05.04 தொடக்கம் 2021 மே மாதம் 20 ஆம் திகதி வரை அனுமதியில்லை. மே மாதம் 20 ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டின் கொவிட் நிலைமையைக் கருத்தில் கொண்டு மீள் பரிசீலனை செய்யப்படும் |
| 28 | மரணச் சடங்குகள் (கொவிட் மரணங்கள் தவிர்ந்த) | வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய அதிகபட்ச நபர்கள் 25 பேர் ஆவதுடன், மேற்கொள்ள வேண்டிய அனைத்து முற்பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு மருத்துவமனையில்/ பிரேதப் பரிசோதனையின் பின்னர் பூதவுடல் வழங்கப்பட்ட பின்னர் 24 மணித்தியாலயங்களில் இறுதிக்கிரியை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| 29 | விருந்து/விழா/(உள்ளக/வெளியக) | தடை செய்யப்பட்டுள்ளது |
| 30 | மக்கள் ஒன்றுகூடல்கள் | தடை செய்யப்பட்டுள்ளது |
| 31 | வணக்கத்தலங்கள் | கூட்டாகச் செய்யும் விடயங்கள் மற்றும் கூடுதல் தடை செய்யப்பட்டுள்ளது |
| 32 | தங்குமிட வசதிகள் வழங்கும் இடங்கள் | வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய தங்கியிருக்கக் கூடிய இயலளவுக்கு முடியுமானாலும், புதிதாக வருபவர்களுக்கு தங்குமிடம் வழங்குதல் தடை |
| 33 | விளையாட்டரங்கு, உள்ளக விளையாட்டரங்குகள் | வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய விளையாட்டரங்கில் அல்லது கூடத்தில் இயலளவின் 25% வீதமானவர்களுக்கு இயலும் |
| 34 | உடற்பயிற்சி நடைபாதை | தனியாக நடப்பதற்கு முடிவதுடன், கூட்டமாக கூடுவதற்குத் தடை |
| 35 | திரையரங்குகள் மற்றும் நாடக அரங்குகள் | மூடப்படும் |
| 36 | சிறுவர் பூங்காக்கள் | மூடப்படும் |
| 37 | கேளிக்கை விழாக்கள்,இசை நிகழ்ச்சிகள், கடற்கரை விருந்துகள் | தடை செய்யப்பட்டுள்ளது |
| 38 | நீச்சல் தடாகங்கள் | மூடப்படும் |
| 39 | கடற்கரையில் கூடுதல் | தடை செய்யப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| 40 | உணவு விடுதிகள் (உணவு உண்ணும்) | வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் 25% வீதமானவற்றை பயன்படுத்த முடியும் |
| 41 | உணவு விடுதிகள் (உணவு வெளியில் எடுத்துச் செல்லும்/ கொண்டுவந்து வழங்கும்) | **DReAM** என அறிமுகப்படுத்தப்பட்டுள்ள குறித்த முற்பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றி கொண்டு செல்லல் |
| 42 | மதுபான விற்பனை நிலையம் | **DReAM** இனைப் பின்பற்றி திறத்தல் |
| 43 | Pubs and Bars | மூடப்படும் |
| 44 | Casino, Night Clubs | மூடப்படும் |
| 45 | Betting Centers | மூடப்படும் |
| 46 | உடற்பிடிப்பு நிலையங்கள் (Massage Centres) | மூடப்படும் |
| 47 | ஹோட்டல், வாடி வீடு, மற்றும் விருந்தினர் விடுதிகள் | வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய மொத்த இயலளவின் 50% வீதமானவர்கள் தங்கியிருக்கலாம் |